26114

சுருக்கம்

மீன்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – செல்வி. இரா.கீர்த்திகா, இளநிலை உதவியாளர் – பணி வரன்முறைப்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (மீன்.2) துறை

அரசாணை (டி) எண்.295

நாள் 11.11.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
ஐப்பசி – 26

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.218, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (மீன்.2) துறை, நாள் 30.11.2018.
2. மீன்துறை இயக்குநரின் கடித ந.க.எண்.18021/எம்.5/2017, நாள் 24.10.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.

----

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மீன்துறையில் நேர்முக உதவியாளராக பணிபுரிந்த போது 18.07.2014 அன்று பணியிடை மரணமடைந்த திரு. நா.இராஜ்மோகன் என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி. இரா. கீர்த்திகாவிற்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியினை வழங்கும் பொருட்டு, தனியரின் சார்பாக, அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 10.12.2014 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(பி) ஆகியவற்றினைத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58–இல வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தளர்வு செய்து பணி நியமனம் வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மீன்துறை இயக்குநர் அவர்கள், மீன்துறையில் நேர்முக உதவியாளராக பணிபுரிந்த போது 18.07.2014 அன்று பணியிடை மரணமடைந்த திரு. நா.இராஜ்மோகன் என்பவரின் மகளான செல்வி. இரா. கீர்த்திகா, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் திருவாரூர் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு 13.02.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் பணி நியமனம் தொடர்பாக எவ்வித விதித்தளர்வும் உட்படாததால், தனியரது பணியினை அவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 13.02.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி-2-இல் உள்ள மீன்துறை இயக்குநரின் கருத்துருவை அரசின் ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின் அதனை ஏற்று, தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் தற்காலிகமாக திருவாரூர் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட செல்வி. இரா.கீர்த்திகா என்பவருக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 13.02.2019 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இளநிலை உதவியாளர் செல்வி. இரா.கீர்த்திகாவின் பணியானது 13.02.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் மற்றும் சம்பள நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.14324/க்யூ.1/2020-2, நாள் 05.11.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.28948/ஜி.2/2020-1, நாள் 09.11.2020-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.கோபால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மீன்துறை இயக்குநர், சென்னை-35.
செல்வி. இரா. கீர்த்திகா, இளநிலை உதவியாளர்
(மீன்துறை இயக்குநர் மூலமாக)

நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

S. Thamil 12/11/2020
பிரிவு அலுவலர்